சுருக்கம்

பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி–கருணை அடிப்படையில் பணி நியமனம்– திரு பா.முத்தழகன், (கு/பெ. காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு. ஆர்.பாலசுப்ரமணியன்) என்பவர் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் – பணிவரன்முறை – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (பி1) துறை

அரசாணை (3டி) எண். 25

நாள் : 11.05..2020
திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி, சித்திரை 28
படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. தலைமைப் பொறியாளர்(கட்டடம்), பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம் கடிதம் எண். எஸ் 1(2)/4403/2019, நாள் 01.08.2019.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.1) துறை, நாள் 22.01.2020.

---

ஆணை:–

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பொதுப்பணித்துறை கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டம், குளித்தலை அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்த வந்த திரு ஆர்.பாலசுப்ரமணியன் 09.06.2006 அன்று காலமானதைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரரான அவரது மகன் திரு பா.முத்தழகன் என்பவருக்கு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்களால் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் அளிக்கப்பட்டு, அவர் 19.09.2018 முற்பகல் முதல் அப்பதவியில் சேர்ந்து ஈரோடு கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்ட அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றும், தனியர் தனது இடைநிலைக் கல்வியை ஏப்ரல் 1997–இல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவரின் பிறந்த தேதி 12.05.1982 என்றும் தெரிவித்து, தேவையான சான்றாவணங்களை அனுப்பி வைத்து தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 19.09.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர்(கட்டடம்), பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே தலைமைப் பொறியாளர்(கட்டடம்), பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம் அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. திரு பா.முத்தழகன்,

இளநிலை உதவியாளர், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொதுப்பணித் துறையில் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட நாளான 19.09.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், பணிநியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் நாளிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வு/ ஊதிய நிலுவை இருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அ.சா.எண். 1722/க்யூ2/2020–1, நாள். 19.03.2020–1 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அ.சா. எண்.10733/ஜி2/2020, நாள் 23.03.2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசகன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர்(கட்டடம்), பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம், திருச்சி–20.
திரு பா.முத்தழகன், இளநிலை உதவியாளர்.
(தலைமைப் பொறியாளர்(கட்டடம்), பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம், திருச்சி–20 வழியாக)
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை –18.
நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை /
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை– 9.
இருப்பு கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்

// Attested //

Assistant Engineer P.W.D.,
Buildings Construction Section-I,
Gobichettipalayam - 638 476.